SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லறை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் மாசி 26 | MAALAI EXPRESS | ஹிஜ்ரி 1446 ரமலான் 9

மாநிலம் பயனுற!

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews

● புதுச்சேரி ● திங்கள்கிழமை, மார்ச் 10, 2025 ● வெளியூர்: 11-3-2025, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 234 ● 8 பக்கம் ● ரூ.6

## பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கியது

# புதுச்சேரியில் தனிநபர் வருமானம் ரூ.3 லட்சமாக உயர்வு

## பட்ஜெட் உரையில் கவர்னர் கைலாஷ்நாதன் தகவல்



புதுச்சேரி, மார்ச் 10-

புதுச்சேரி சட்டசபையின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல்நாளான இன்று கவர்னர் கைலாஷ் நாதன் உரையாற்றினார். இதற்காக அவர் காலை 9.25 மணிக்கு புதுவை சட்டமன்ற வளாகத்துக்கு வந்தார். அவருக்கு போலீசார் அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

பின்னர் சபாநாயகர் ஏம்பலம் செல்வம், பூங்கொத்து கொடுத்து கவர்னரை வரவேற்று சட்டசபை மைய மண்டபத்துக்கு அழைத்து சென்றார். அங்கு சபாநாயகர் இருக்கையில் கவர்னர் அமர்ந்தார். காலை 9.30 மணிக்கு தமிழ்தாய் வாழ்த்துடன் சபை நிகழ்வுகள் தொடங்கியது. தொடர்ந்து கவர்னர் கைலாஷ்நாதன் தமிழில் உரையாற்றினார். அவரது உரையில் கூறியிருப்பதாவது: ஏ.எப்.டி. உதவி திட்டம், நபார்டு வங்கிகள் மூலம் தற்போது நடைபெறும் பணிகளுக்கு ரூ.659 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் ரூ.8 ஆயிரத்து 467 கோடிக்கான புதிய பணிகளும் மேற்கொள்ளப்படும். பிரதமர் ஏக்தா மால் ஏற்படுத்த ரூ.104 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.

புதுவை விமான நிலையத்தின் ஓடுதளத்தை 3 ஆயிரம் மீட்டராக விரிவுபடுத்தவும், ரெயில் நிலையத்தை விரிவாக்கம் செய்யவும் ஆயத்த பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஸ்மார்ட் சிட்டி அமைப்பு ரூ.620 கோடிக் கான திட்ட பணிகளை பல்வேறு துறைகள் மூலம் நிறைவேற்றி வருகிறது. இதில் ரூ.175 கோடிக்கான பணிகள் முடிவடைந்துள்ளது. மேலும் ரூ.445 கோடிக்கான பணிகள் நடைபெற உள்ளது. புதிய ஒருங்கிணைந்த பஸ் வளாகம் விரைவில் பொது மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட உள்ளது. இதேபோல ரூ.99 கோடியில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் மக்கள் சேவைக்கு முன்னோடியாக அமையும். அரசு எடுத்த ஆக்கப்பூர்வ நடவடிக்கையால் 2020–21ம் ஆண்டில் ரூ.8 ஆயிரத்து 418.96 கோடியிலிருந்து மாநில வருவாய், 202324ம் ஆண்டில் ரூ.11 ஆயிரத்து 311.92 கோடியாக உயர்ந்து 34.36 சதவீதம் வளர்ச்சியை எட்டி யுள்ளது. நமது பொருளாதாரத்தின் அளவு கடந்த 5 ஆண்டில் 46.44 சதவீதம் அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆண்டு சராசரி வளர்ச்சி வீதமான 9.56 சதவீதத்தை எட்டி யுள்ளது. 2020–21ம் ஆண்டில் 2.21 சதவீதமாக இருந்த வளர்ச்சி விகிதம் 202425ம் ஆண்டில் 8.81 சதவீதத்தை எட்டியுள்ளது. தற்போதைய நிலையில் தனி நபர் வருமானம் 5.33 சதவீதம் அதிகரித்து கடந்த ஆண்டின் ரூ.2 லட்சத்து 87 ஆயிரத்து 354ல் இருந்து ரூ.3 லட்சத்து 2 ஆயிரத்து 680ஐ அடைந்துள்ளது. ஒவ்வொரு தனிநபரிடமும் கூடுதலாக ரூ.15 ஆயிரம் வருவாய் தரவுகள் அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

## சாம்பியன்ஸ் டிராபி: மூன்றாவது முறையாக மகுடம் சூடியது இந்திய அணி



துபாய், மார்ச் 10-

சாம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதிப்போட்டி துபாயில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய நியூசிலாந்து 251 ரன்களை எடுத்தது. தொடர்ந்து ஆடிய இந்தியா 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்று சாம்பியன்ஸ் டிராபியை மூன்றாவது முறையாக கைப்பற்றி அசத்தியது. சாம்பியன்ஸ் டிராபி வென்ற இந்திய அணிக்கு ஜனாதிபதி திரவுபதி முர்மு, பிரதமர் மோடி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். சாம்பியன்ஸ் டிராபியில் கோப்பை வென்ற இந்தியாவின் வெற்றியை நாடுமுழுவதும் ரசிகர்கள் பட்டாசு வெடித்தும், தேசியக் கொடியை அசைத்தும் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

## தி.மு.க. எம்.பி.க்கள் அமளி மக்களவை ஒத்திவைப்பு



புதுடெல்லி, மார்ச் 10-

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜனவரி 31ந்தேதி தொடங்கியது. பிப்ரவரி 1ந்தேதி 202526ம் நிதி ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்து பேசினார். தொடர்ந்து நாடாளுமன்றத்தில், பல்வேறு மசோதாக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

பின்னர் எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே நடந்து முடிந்த இரு அவைகளும், மார்ச் 10ந்தேதி (இன்று) வரை ஒத்தி வைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து, 24 நாட்கள் இடைவெளிக்கு பின் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் 2வது அமர்வு இன்று தொடங்கியது.

காலை 11 மணிக்கு மக்களவை கூடிய நிலையில், தமிழ்நாட்டிற்கு கல்வி நிதி மறுக்கப்படுவதாக தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கப்பாண்டியன் கேள்வி எழுப்பினார். புதிய கல்விக்கொள்கையை பின்பற்றாததால் தமிழ்நாட்டிற்கு வழங்கவேண்டிய கல்வி நிதியை தர மத்திய அரசு மறுப்பதாக அவர் கூறினார்.

அப்போது பேசிய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான், "தேசிய கல்விக்கொள்கை மூலம் இந்தி திணிக்கப்படுவதாக தவறாக பரப்புரை செய்யப்படுகிறது. தமிழக மாணவர்களை தி.மு.க. அரசு வஞ்சிக்கிறது. மாணவர்களின் எதிர்காலத்தையும் மாநில அரசு பாழடிக்கிறது" என்றார். மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதானின் பதிலை ஏற்க மறுத்து தி.மு.க. எம்.பி.க்கள் மக்களவையில் முழக்கம் எழுப்பினர். இதனால் மக்களவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து மக்களவை மதியம் 12 மணி வரை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

## பையனூர் சிப்காட் கோத்ரேஜ் ஆலையில் உற்பத்தியை தொடங்கி வைத்தார் முதலமைச்சர்



சென்னை, மார்ச் 10-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பையனூர் சிப்காட்டில் ரூ.515 கோடி முதலீட்டில் உலகத்தரம் வாய்ந்த கோத்ரேஜ் தொழிற்சாலையை நேரில் சென்று திறந்து வைத்தார்.

பின்னர் இந்த தொழிற் சாலையை பார்வையிட்ட அவர் அங்கு பணிபுரியும் பெண்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி விழாவில் சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகையையொட்டி மாமல்லபுரம் சாலை மற்றும் கிழக்கு கடற்கரை சாலைகளில் வழி நெடுக பல கிலோ மீட்டர் தூரத்துக்கு தி.மு.க. கொடி வைக்கப்பட்டிருந்தது. கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் சாலைகளில் நின்று முதலமைசசர் மு.க.ஸ்டாலினுக்கு வரவேற்பு தெரிவித்தனர்.

## வார தொடக்கத்தில் சற்று உயர்ந்த தங்கம் விலை



சென்னை, மார்ச் 10-

தங்கம் விலை கடந்த மாதம் (பிப்ரவரி) முதல் ஏற்ற, இறக்கத்துடன் இருக்கிறது. கடந்த 4ந்தேதியில் இருந்து விலை அதிகரித்து காணப்பட்டது. கடந்த வாரத்தில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.800 வரை உயர்ந்துள்ளது. இதனால் தங்கம் விலை சவரனுக்கு ரூ.64,320க்கு விற்பனையானது.

இந்த நிலையில், வார தொடக்க நாளான இன்று தங்கம் விலை சற்று உயர்ந்துள்ளது. கிராமுக்கு 10 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.8,050க்கும் சவரனுக்கு 80 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.64,400க்கும் விற்பனையாகிறது.

கடந்த நான்கு நாட்களாக வெள்ளி விலையில் மாற்றமில்லை. ஒரு கிராம் வெள்ளி 108 ரூபாய்க்கும் பார் வெள்ளி ஒரு லட்சத்து எட்டாயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● திங்கள் ● மார்ச் 10, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கடனுதவி



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிக்கான காசோலையினை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்.

# அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், ஜாப்ராபேட்டையில் நடைபெற்ற உலக மகளிர் தினவிழாவில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சியை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# பகுதிநேர நியாய விலை கடை திறப்பு




வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் முத்துசாமி ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், சின்னமணியம்பாளையத்தில் பகுதிநேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்கினார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), சரஸ்வதி (மொடக்குறிச்சி).

## தலையங்கம்

### மாலை எக்ஸ்பிரஸ்

10.3.2025 (திங்கள்கிழமை)

# வர்த்தக போர்

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், பதவியேற்ற நாளில் இருந்து பல அதிரடி நடவடிக்கைகளை எடுக்க தொடங்கிவிட்டார். உரிய ஆவணங்கள் இல்லாமல் அமெரிக்காவில் தங்கியுள்ளவர்களுக்கு பிறப்புரிமை அடிப்படையில் அளிக்கப்படும் குடியேற்ற உரிமையை ரத்து செய்வது, சட்டவிரோதமாக குடியேறியவர்களை நாட்டில் இருந்து வெளியேற்றுவது போன்ற அவருடைய நடவடிக்கைகள் அங்குள்ள இந்தியர்களையும் ஆட்படுத்தியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக அண்டை நாடான கனடா மற்றும் மெக்சிகோ பொருட்களுக்கு 25 சதவீதம் கூடுதல் வரியை விதித்தார். பின்னர் அதனை ஒரு மாதத்திற்கு மட்டும் நிறுத்தி வைப்பதாக அறிவித்தார். அதன்படி நிறுத்தி வைக்கப்பட்ட இந்த கூடுதல் வரி விதிப்பு கடந்த 3ந் தேதி முதல் அமலுக்கு வந்தது. ஆனால் நான்கே நாட்களில் மீண்டும் 2வது முறையாக டிரம்ப், இந்த கூடுதல் வரி விதிப்பை ஏப்ரல் 2ந் தேதி வரை நிறுத்தி வைப்பதாக அறிவித்துள்ளார். அதனால் கனடாவும், மெக்சிகோவும் பெருமூச்சு விட்டுள்ளன. அதேவேளையில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 20 சதவீதம் வரி விதித்துள்ளார். இது உடனடியாக நடைமுறைக்கு வந்துவிட்டது. இதற்கு சீனாவோ வர்த்தக போரை நீங்கள் விரும்பினால், அதற்கு நாங்களும் தயார் என்று பதிலடி கொடுத்துள்ளது. இதனால் ஒரு வர்த்தக போர் தொடங்கிவிட்டது என்றே உலகம் கருதுகிறது.

வெள்ளை மாளிகையில் இருந்து டிரம்ப் இந்த அறிவிப்பை வெளியிட்டவுடனேயே அமெரிக்க பங்கு சந்தையில் பங்குகள் விலை பெரிதும் வீழ்ச்சி அடைந்தது. இந்த வரிவிதிப்பால் அமெரிக்க மக்கள் பல பொருட்களுக்கு கூடுதல் விலையை கொடுக்கவேண்டியது இருக்கும் என்று அங்குள்ள புகழ்பெற்ற பத்திரிகையான 'வால் ஸ்டிரீட் ஜர்னல் மூடிஸ்' நிறுவன ஆய்வுகளை மேற்கோள் காட்டி ஒரு பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஷூக்கள் விலை, இனி 4 சதவீதம் அதிகரிக்கும். அதுபோல சீனாவும், அமெரிக்க பொருட்களுக்கு கூடுதல் வரி விதிப்பை பதிலடியாக அறிவித்துள்ளது. அதனால் சீனாவில் அமெரிக்க பொருட்களுக்கு அந்த நாட்டு மக்களும் கூடுதல் விலை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியாவுக்கும் ஏப்ரல் 2ந்தேதி முதல் பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார். அதாவது இந்தியா, அமெரிக்க பொருட்களுக்கு என்ன வரி விதிக்கிறதோ?, அதே வரியை அமெரிக்காவும், இந்திய பொருட்களுக்கு இனி விதிக்கும். கடந்த ஆண்டு நிலவரப்படி அமெரிக்காவில் இருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு சராசரியாக 11 சதவீதம் வரியும், இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சராசரியாக 3 சதவீதம் வரியும் விதிக்கப்பட்டது. இப்போது டிரம்ப் பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று சொன்னாலும் அமெரிக்காவுக்கு சென்று இருந்த வர்த்தக மந்திரி பியூஷ் கோயல் தலைமையிலான குழு நடத்திமுடித்த ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தையினால் வரி மற்றும் வரி இல்லாத தடைகளுக்கு சுமுக முடிவு எட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# செங்கழுநீர் மாரியம்மன் கோயிலில் குடமுழுக்கு விழா



பாகூர் அருகே சேலியமேடு செங்கழுநீர் மாரியம்மன் கோயிலில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவில் கோபுர கலசத்துக்கு புனிதநீர் ஊற்றப்பட்டது.

# மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவி





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நேரலையினை திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் செல்வராஜ்.

# யுனிவர்சல் அகடமி பள்ளியில் உலக மகளிர் தின விழா



**காரைக்கால், மார்ச் 10-**

காரைக்காலில் அமைந்துள்ள யுனிவர்சல் அகடமி பள்ளியில் உலக மகளிர் தின விழ மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவின் துவக்கமாக பள்ளி மாணவர்கள் பெண்கள் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு பேரணியை காரைக்கால் மாவட்ட கலெக்டர் அலுவலக வாயிலில், காரைக்கால் தெற்கு காவல் கண்காணிப்பாளர் சுப்பிரமணியன் கொடியசைத்து வாழ்த்துரை வழங்கி பேரணியை தொடங்கி வைத்தார். இப்பேரணி கலெக்டர் அலுவலகத்திலிருந்து புறப்பட்டு காரைக்கால் முக்கிய கடை வீதிகள் வழியாக, மாணவர்கள் பெண்கள் பாதுகாப்பு குறித்த பதாகைகளை கையில் ஏந்தியும். முழக்கமிட்டும் சென்றனர்.

மேலும் பள்ளரியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் மாணவர்களின் தாய் மற்றும் சகோதரிகள் கலந்துகொண்டு பரிசுகளை வென்றனர்.மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பள்ளியின் தாளாளர் ஆனந்தி, பள்ளியின் நிறுவனர் மகேந்திரன், இயக்குனர் அஸ்வின் மற்றும் முதல்வர், தலைமை ஆசிரியை, ஆகியோர் பரிசுகளை வழங்கி, பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தனர். விழா ஏற்பாடுகளை ஆசிரிய பெருமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம்



**திருக்கோவிலூர், மார்ச் 10-**

திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டார் கோவில் எதிரில் கலைஞர் திடலில் திமுக இளைஞரணி சார்பில் தமிழக துணை முதலமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க மத்திய பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினகரன் தலைமை தாங்கினார். விக்கிரவாண்டி எம்.எல்.ஏ., சிவா, மாவட்ட சேர்மன் ஜெயச்சந்திரன், ஒன்றிய செயலாளர் பி.வி.ஆர். விசுவநாதன், ஒன்றிய சேர்மன் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், துணைத் தலைவர் ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகர செயலாளர் பூக்கடை கணேசன் அனைவரையும் வரவேற்றார். கூட்டத்தில் தமிழக வனம் மற்றும் காதி கிராம தொழில் துறை அமைச்சர் பொன்முடி, உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன், விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் பொன்.கௌதம சிகாமணி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இந்தி திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பில் அநீதி இழைக்கும் மத்திய பாஜக அரசை கண்டித்து கண்டன உரையாற்றினர்.

# மதுரையில் மாபெரும் சிலம்ப போட்டி



**மதுரை, மார்ச் 10-**

மதுரை ஆயுதப்படை மைதானத்தில் ரிசர்வ்லைன் ஸ்ரீ மாரியம்மன் சிலம்பாட்ட கலைக்குழுவின் முதலாம் ஆண்டு மாபெரும் சிலம்பப்போட்டி ஆசான்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களும்மான ரஞ்சித், தினேஷ் குமார் ஆகியோர் தலைமையில், மாநகர் காவல்துறை உதவி ஆணையாளர் முத்தரசு போட்டியை துவங்கி வைத்தார். இப்போட்டிகளில் தென் மாவட்டங்களில் இருந்து 5 வயது முதல் 60 வயது வரை உள்ள சுமார் 800க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கு கொண்டு தங்களது தனி திறமையும், குழு திறமையும் வெளிப்படுத்தினார்கள். இப்போட்டியில் ஒற்றைக்கம்பு, இரட்டைக் கம்பு, சுருள்வாள், குழு போட்டி ஆகிய நான்கு பிரிவில் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் வெற்றி பெறுப்பவர்களுக்கு முதல் பரிசாக பத்தாயிரம் ரூபாய், இரண்டாம் பரிசாக ஏழாயிரம் ரூபாய், மூன்றாம் பரிசாக 5000 ரூபாய் வழங்கப்படுகிறது. அதுபோக போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சான்றிதழ், டிஷர்ட், இரண்டடி கோப்பை, மெடல்கள் வழங்கப்படுகிறது. இந்நிகழ்வில் மதுரை மாவட்ட சிலம்பட்ட அமைப்பாளர் ராஜா, பெற்றோர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

# மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடனுதவி அமைச்சர் ராமச்சந்திரன் வழங்கினார்



**தென்காசி, மார்ச் 10-**

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் நிகழ்ச்சியினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ராமச்சந்திரன் தென்காசி மாவட்ட மகளிர் சுய உதவிக்குழுவினருக்கு கடனுதவித் தொகைக்கான காசோலையினை வழங்கினார்கள்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் நலனுக்காக பல்வேறு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் இன்றைய தினம் தென்காசி மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிக்கான காசோலை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 2012–2013 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. பெண்களின் முன்னேற்றத்திற்காக ஊரக மற்றும் நகர்ப்புற ஏழை மக்களுக்கான வலுவான உயிரோட்டத்துடன் கூடிய மக்கள் அமைப்புகளை உருவாக்கி, நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பல்வேறு சேவைகளையும் முறையாகப் பெற வழிவகை செய்து வாழ்வாதாரத்தை உயர்த்தி குடும்ப வருமானத்தை பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாக கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தென்காசி மாவட்டத்தில் கிராம பகுதிகளில் 5386 சுய உதவிக்குழுக்களும், நகர்ப்புறங்களில் 3371 மகளிர் சுய உதவிக்குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்களில் மொத்தம் 114361 பெண்கள் உறுப்பினர்களாக இருந்து செயல்பட்டு வருகின்றனர். தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக வங்கி கடனுதவிகள் பெற்றுத்தரப்பட்டு, அவர்கள் பொருளாதார முன்னேற்றம் அடைவதை உறுதிபடுத்தி வருகிறது.

தற்பொழுது தென்காசி மாவட்டத்தினை சார்ந்த 407 மகளிர் சுய உதவிக்குழுக்களை சார்ந்த 4719 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.39.90 கோடி வங்கிகடனும், 8 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உள்ள 48 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 614 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ5.18 கோடி பெருங்கடனும், 500 சுய உதவிக்குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி ரூ.5.00 கோடியும், வாழ்ந்துகாட்டுவோம் திட்டத்தின் மூலம் 46 சுய உதவிக்குழுக்களில் இணைந்துள்ள 92 உறுப்பினர்களுக்கு நுண்தொழில் நிறுவன நிதிக்கடன் ரூ.52.00 லட்சமும் மொத்தம் 1001 சுய உதவிக்குழுக்களை சார்ந்த 6425 மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.50.66 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொகையை 100 சதவீதம் திருப்பி செலுத்துவதோடு, தங்களது வருமான பெருக்க திட்டத்திற்கு மட்டுமே பயன்படுத்தி குடும்ப வருமானத்தினை உயர்த்துவதோடு தங்களது வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி, சுய உதவிக்குழு பெண்கள் வாழ்க்கை வளமாக வேண்டும் என வாழ்த்துவதோடு சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார், சங்கரன் கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், சமூக நல அலுவலர் இந்திரா பிரியதர்ஷினி, தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, ஊராட்சி ஒன்றியக்குழு துணைத்தலைவர் கனகராஜ் முத்துப்பாண்டியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக்குழுவினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# Harry Brook pulls out of IPL again: 'Playing for my country remains my priority and focus'

**New Delhi, March 10-**

Harry Brook has pulled out of the Indian Premier League (IPL) for the second season running, citing the need to prepare for his commitments with the national team. Harry Brook was bought by Delhi Capitals for Rs 6.25 Crore in the mega auction in November.

"I have made the very difficult decision to pull out of the upcoming IPL," Brook said in a statement.

"I apologise unreservedly to the Delhi Capitals and their supporters. I love cricket. Ever since I was a young boy, I have dreamt of playing for my country, and I am extremely thankful to have the opportunity to play the game I love at this level.

"With the guidance of people I trust, I have taken the time to seriously consider this decision. It is a really important time for England cricket, and I want to fully commit to preparing for the upcoming series. In order to do this, I need time to recharge after the busiest period in my career to date.

"I know not everyone will understand, and I don't expect them to, but I have to do what I believe is right, and playing for my country remains my priority and focus. I remain hugely grateful for the opportunities I have been given and the support I receive."

Brook's decision might not sit well with the Delhi Capitals, who had re-signed him after he pulled out last year, following the death of his grandmother.

The England middle-order batter is set to face a two-year ban from the IPL.

According to a new rule introduced by the IPL, "Any player who registers in the player auction and after getting picked at the auction, makes himself unavailable before the start of the season, will get banned from participating in the tournament and player auction for 2 Seasons."

The competition's only exception is for "an injury/medical condition, which will have to be confirmed by the player's home board".

# பெண்களால் தான் ஆண்களால் வெற்றிகரமாக செயல்பட முடிகிறது: ராஜேஸ்குமார் எம்பி புகழாரம்

**நாமக்கல், மார்ச் 10-**

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் உலக மகளிர் தின விழா 2025 முன்னிட்டு, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா, தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி ஆகியோர் முன்னிலையில், கேக் வெட்டி மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஒவ்வொரும் ஆண்டும் மார்ச் 8 ஆம் நாள் மகளிரின்



சாதனைகளை சிறப்பிக்கும் வகையிலும் அவர்களை பல்வேறு துறைகளில் வெற்றி பெற ஊக்குவிக்கும் வகையிலும் உலக மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய தினம் நாமக்கல் மாவட்டத்தில் உலக மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப் பட்டு வருகிறது.

மேலும், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் முன்னிலையில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் உமாவுக்கு பொன்னாடை அணிவித்து, பரிசுகள் வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாவட்ட அளவிலான அனைத்து பெண் அலுவலர்களான மாவட்ட சமூக நல அலுவலர் காயத்திரி, வேளாண்மை இணை இயக்குநர் கலைசெல்வி, தோட்டக்கலைத் துணை இயக்குநர் புவனேஷ்வரி, வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணவேணி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பத்மாவதி உள்ளிட்ட அனைவருக்கும் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு சால்வை அணிவித்து வாழ்த்துகளை தெரிவித்தார்.

# தென்காசியில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்



தென்காசி, மார்ச் 10-

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மையம் மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ராமச் சந்திரன் கலந்துகொண்டு வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு பெற்றவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பின்னர் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு, தென்காசி மாவட்டத்தில் இன்றைய தினம் மகளிர்களுக்காக எண்ணற்ற நிகழ்ச்சிகளை நடத்தி அவர்களை ஊக்குவிக்கும் விதமாக கர்ப்பிணிப் பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு, திருமண நிதி உதவித்திட்டத்தின் கீழ் தாலிக்குத்தங்கம், மகளிர் சுய உதவிக்கடன், நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக இன்றைய தினம் மாவட்ட வேலை வாய்ப்பு மையம் மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையம் சார்பில் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் சிறப்பாக நடைபெற்றது. இவ்வேலைவாய்ப்பு முகாமில் 2724 கல்லூரி முடித்த மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். அதில் 586 நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்வு பெற்ற சகோதர, சகோதரிகள் சம்பளம் குறைவாக உள்ளது என்று வேலையை விட்டு விடாமல் குடும்பத்தை காப்பாற்ற வேண்டும். இவ்வேலை வாய்ப்பு முகாமில் பணி நியமனம் பெற்றவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ராஜா, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், திருநெல்வேலி மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் சண்முகசுந்தர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சையது முகம்மது, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், மார்த்தாண்ட பூபதி மற்றும் அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தவளக்குப்பம் நேஷனல் பள்ளியில் மகளிர் தின விழா





புதுச்சேரி, மார்ச் 10-

தவளக்குப்பம், நேஷனல் ஆங்கில உயர்நிலைப் பள்ளியில், மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பள்ளியின் சேர்மன் டாக்டர். கிரண்குமார் அனைவரையும் வரவேற்றார். பள்ளியின் தாளாளர், டாக்டர். எழிலரசி கிரண்குமார் விழாவிற்கு தலைமை தாங்கினார். விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாக சமூக ஆர்வலரும் கிராண்ட் வியூ ஓட்டலின் மேலாண் இயக்குனரு மான விஜயலட்சுமி கிருஷ்ணராஜ், டிவிலைட் தொழில்நுட்ப நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் ஜீவிதா முருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள், சமூகத்தில் பெண் களின் உரிமைகள், பெண்களின் பாதுகாப்பு, பெண்களின் முன்னேற்றம், பல்வேறு துறைகளில் பெண்கள் புரிந்த சாதனைகள் போன்றவற்றை எடுத்துரைத்தனர். விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந் தினர்கள், சமூகத்தில் பெண்களின் உரிமைகள், பெண்களின் பாதுகாப்பு, பெண்களின் முன்னேற்றம், பல்வேறு துறைகளில் பெண்கள் புரிந்த சாதனைகள் போன்றவற்றை எடுத்துரைத்தனர்.

மகளிர் தினத்தை முன்னிட்டு மாணவியருக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவியருக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசுகள் வழங்கி பாராட்டினர். மகளிர் தின கொண்டாட்டத்தினை சிறப்பிக்கும் வகையில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளியின் தலைமை ஆசிரியை உமா நன்றியுரை வழங்கினார். விழாவிற்கான ஏற்பாடுகளை பள்ளியின் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தவளக்குப்பம் ஆனந்தா நகர் பகுதியில் ரூ.2.16 கோடியில் புதிய தார் சாலை அமைக்கும் பணி

## பூமி பூஜையில் சபாநாயகர் செல்வம் பங்கேற்பு

புதுச்சேரி, மார்ச் 10-

மணவெளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தவளக்குப்பம் ஆனந்தா நகர் பகுதியில் கழிவு நீர் வடிகால் வசதி மற்றும் சாலை வசதிகள் இல்லாததால் அப்பகுதி யில் உள்ள மக்கள் கழிவு நீரை வெளியேற்றுவதற்கும், மழைக் காலங்களில் மழைநீர் வடியாமல் தேங்கி நிற்பதால் மிகுந்த சிரமத்திற்கும் உள்ளாகினர்.

இப்பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் அமைத்து சாலைகளை ஏற்படுத்தி தரவேண்டும் என அப்பகுதி மக்களின் கோரிக்கையை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டப்பேரவை தலைவருமான செல்வத்திடம் கோரிக்கை வைத்தனர். சட்டப்பேரவை தலை வர் செல்வம், இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்து புதுச்சேரி அரசு பொதுப்பணித்துறை கட்டிடங்கள் மற்றும் சாலைகள் கோட்டத்தின் மூலம் ரூ.2.16 கோடி திட்டம் மதிப்பீட்டில் தவளக்குப்பம் ஆனந்தா



நகர் பகுதியில் உள்ள அனைத்து வீதிகளிலும் தார் சாலை மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்து வதற்கு அரசாணை பெற்று தந்தார்.

இதன்படி இப்பணிகளை துவங்கும் வகையில் பணிகளுக்கான பூமி பூஜை சட்டப்பேரவை தலைவர் செல்வம் முன்னிலையில், நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கண்காணிப்பு பொறியாளர் வீரசெல்வம், செயற்பொறியாளர் சந்திரகுமார், உதவி பணியாளர் கோபி, இளநிலை பொறியாளர் நடராஜன், அரியாங்குப்பம் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், உதவிப் பொறியாளர் நாகராஜ், நேஷனல் பள்ளி தாளாளர் கிரீன் மற்றும் சுப்புராயன், தேசிங்கு, தமிழ் வாணன், சரவணன், சுப்பிரமணி உள்ளிட்ட அப்பகுதி முக்கிய பிரமுகர்கள், ஏராளமான பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர். விரைந்து நடவடிக்கை எடுத்து அப்பகுதியில் புதிய தார் சாலை மற்றும் வடிகால் வசதி ஏற்படுத்தி தந்த சட்டப் பேரவை தலைவருக்கு அப்பகுதி மக்கள் நன்றி தெரிவித்தனர்.

# 617 சுய உதவிக்குழுவினருக்கு கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



கன்னியாகுமரி, மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உலக மகளிர் தினத்தையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 100 இளஞ்சிவப்பு ஆட்டோக் களை பயனாளிகளுக்கு வழங்கி, கொடியசைத்து துவக்கி வைத்தும், சுற்றுச்சுழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் சார்பில் 50 மின் ஆட்டோக் களை மகளிர் சுயஉதவிக் குழுவி னருக்கும். தொழி லாளர் நலத்துறையின் சார்பில் 100 ஆட்டோக் களை பயனாளிகளுக்கு வழங்கியதைத்தொடர்ந்து,

கன்னியாகுமரி மாவட்ட மகளிர் திட்டத் தின் சார்பில் மாவட்டத்திற் குட்பட்ட 617 சுயஉதவிக்குழு வினருக்கு கடனுதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம் தலைமையில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா முன்னிலையில் சுங்கான்கடை புனித சேவியர் பொறியியல் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களை கன்னியாகுமரி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக நகர்புர வாழ்வாதார இயக்க இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர் வரவேற்றார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட ஊரக பகுதிகளில் 4517 சுயஉதவிக்குழுக்களும், நகர்ப்புற பகுதிகளில் 6236 சுயஉதவிக்குழுக்கள் உட்பட மொத்தம் 10,753 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புர வாழ்வதார இயக்க திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மகளிர் சுயஉதவிக் குழுக் களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு அவர்களுக்கு பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்பட்டு சுய தொழில் மேற்கொள்ளுவதற்கு வங்கிகள் மூலம் கடன் இணைப்பு ஏற்படுத்தி வழங்கப்பட்டு வருகிறது.

2024–2025 ஆம் ஆண்டிற்கு ரூ.881.00 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி ஊரக பகுதிகளில் செயல்படும் 3256 குழுக்களுக்கு ரூ.328.10 கோடியும். நகர்ப்புர பகுதிகளில் 6749 குழுக்களுக்கு ரூ.432.43 கோடி உட்பட மொத்தம் 10005 குழுக்களுக்கு 31.01.2025 வரை ரூ.760.54 கோடி வங்கி இணைப்பு ஏற்படுத்தி வழங்கப்பட்டுள்ளது. சுயஉதவிக்குழுவின் மூலம் காளான் வளர்ப்பு, சணல்நார் பைகள் தயாரித்தல், சிற்றுண்டி தயாரித்தல், அழகு கலை நிலையங்கள், சமையல்கலைகள், மீன் உணவு வகைகள், மிளகு. மஞ்சள் போன்ற வாசனை பொருட்கள் பயிரிடுதல் போன்ற தொழில்களை செய்து வருமானம் ஈட்டி வருகின்றார்கள்.

இன்றைய நிகழ்ச்சியில் சுயஉதவிக்குழுக்களுக்கான வங்கிகடன் 447 சுயஉதவிக்குழுக்களில் உள்ள 6531 பயனாளிகளுக்கு ரூ.53.71 கோடி மதிப்பிலும், ஊராட்சி மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கான வங்கி பெருங்கடன் 162 சுயஉதவிக்குழுக்களில் உள்ள 2065 பயளாகளிகளுக்கு ரூ.10.50 கோடி மதிப்பிலும், மணிமேகலை விருது 8 பேருக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பில் காசோலையும் என மொத்தம் 8612 பயனாளிகளுக்கு ரூ.64 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. உதவி திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) பாலசுந்தரம் நன்றியுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் மகேஷ், சட்டமன்ற உறுப்பினர் பிரின்ஸ் (குளச்சல்), ராஜேஷ்குமார் (கிள்ளியூர்), முனைவர் தாரகை கத்பர்ட் (விளவங்கோடு), மாவட்ட சமூகநல அலுவலர் விஜயமீனா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சத்துணவு கருணாவதி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி தலைமை மேலாளர் சண்முக சுந்தர பாண்டியன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், மாநகராட்சி மண்டல தலைவர் செல்வகுமார், பத்மநாபபுரம் நகர்மன்ற தலைவர் அருள்சோபன், மகளிர் திட்ட அலுவலர்கள், பணியாளர்கள், சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

# ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு



ஈரோடு, மார்ச் 10-

ஈரோடு மாநகராட்சிக் குட்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு மாநகராட்சி மண்டலம்3 மற்றும் 4க்குட்பட்ட பகுதியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் முன்மாதிரியாக 6 வார்டுகளில் 24 ஜ் 7 குடிநீர் விநியோகம் செயல்படுத்த ரூ.21.93 கோடி மதிப்பீட்டில் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீர் தரைமட்ட தொட்டிகளுக்கு விநியோகிக்கப்பட்டு, மின்மோட்டார் மூலம் மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வந்தது. தற்பொழுது, இத்திட்டத்தின் மூலம் நேரடியாக மேல்நிலை தொட்டிகளுக்கு குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. மேலும் தொடர்ச்சியாக ஒரே நேரத்தில் குடிநீர் விநியோகிக்காமல், பகுதி பகுதியாக பிரித்து, நீரின் அழுத்தத்தினை அதிகப் படுத்தி மேல்தொட்டி களுக்கு குடிநீர் ஏற்றும் பொழுது, கீழ்நிலை தொட்டிகளில் தண்ணீர் ஏற்றும் அவசியம் இருக்காது. இதனால் பொதுமக்களுக்கு மின்சார கட்டணம் குறைவதோடு, குடிநீர் தேவையும் நிறைவாகும் திட்டமாகும்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மண்டலம் 3க்குட்பட்ட முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் பகுதி2 மற்றும் மண்டலம்4க்குட் பட்ட பாரதி நகர்மேல்நிலை தொட்டி ஆகிய இரண்டு பகுதிகளில் நீர் அழுத்த கருவி மூலம் வீடுகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் வேகத்தினை நீர் அழுத்தக் கருவியின் மூலம் சரிபார்த்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாநகர பொறியாளர் விஜய குமார், உதவி செயற் பொறியாளர் ஆனந்தன் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

காரைக்காலில் இருக்கும் பெண்கள்

# காரைக்கால் அம்மையாரை போல் சக்தியாகவும், மன வலிமையோடும் உள்ளனர்

## சீனியர் போலீஸ் சூப்பிரண்டு பெருமை



**காரைக்கால், மார்ச் 10–**

காரைக்காலில் இருக்கும் பெண்கள் காரைக்கால் அம்மையாரை போல் சக்தியாகவும், மன வலிமையோடும் உள்ளனர். என காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு சவுஜன்யா பெருமைப்பட கூறியுள்ளார்.

காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில், தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு, பெண்களுக்கு என பிரத்தியேக மக்கள் குறை தீர்ப்பு முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் நடைபெற்ற இம் முகாமிற்கு, சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா தலைமை தாங்கி பேசியதாவது: காரைக்கால் மாவட்டத்தில் அனைத்து மக்களும் மத வேறுபாடுகள் இன்றி ஒன்றாக வலிமையாக உள்ளனர். அதேபோல் காரைக்காலில் இருக்கும் பெண்கள் காரைக்கால் அம்மையாரைபோல் சக்தியாக மன வலிமையோடு திகழ்கின்றனர். எனது 4 மாத பணியின் போது, அனைத்து துறைகளிலும் பெண்கள் சிறந்து விளங்குவதை கண்கூடாக காண நேரம் உள்ளது .காரைக்கால் மக்கள் என்னையும் தங்கள் வீட்டு மகளாக கருதுவது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. என்றார்.

மேலும் இம்முகாமில் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பெண்கள் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டை நேரில் சந்தித்து தங்களது புகார்களை விவரித்தனர். பெறப்பட்ட அனைத்து புகார்களும் விரைவில் தீர்வு காணப்படும் என்று சிலர் போலீஸ் சூப்பிரண்ட் தெரிவித்தார். தொடர்ந்து தேசிய மகளிர் தின விழாவை முன்னிட்டு பெண்களுடன் சீனியர் போலீஸ் சூப்பிரண்ட் கேக் வெட்டி கொண்டாடினர். விழாவில் போலீஸ் சூப்பிரண்டு சுப்பிரமணியன், சைபர் கிரைம் பிரிவு இன்ஸ்பெக்டர் பிரவீன் குமார், இன்ஸ்பெக்டர்கள் மரி கிறிஸ்டியன் பால், புருஷோத்தமன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# திரு.பட்டினம் ஜடாயுபுரீஸ்வரர் கோவிலில் வசந்த உற்சவம்



**காரைக்கால், மார்ச் 10–**

காரைக்கால் திரு.பட்டினம் ஜடாயுபுரீஸ்வரர் கோவலில் வசந்த உற்சவம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

காரைக்காலை அடுத்த, திரு.பட்டினம் ஸ்ரீ மையாடுங்கண்ணி சமேத ஜடாயுபுரீஸ்வரர் கோவிலில் பிரம்மோற்சவம் விழா கடந்த 4 ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினமும் பல்வேறு அலங்காரம் மற்றும் வாகனங்களில் சுவாமி வீதியுலா நடைபெற்று வருகிறது, இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வருகின்றனர்.



கோவிலில் ஐந்தாம் நாள் முக்கிய நிகழ்ச்சியாக, வசந்த உற்சவம் என்னும் தியாகராஜர் ஆட்டம் நேற்று மு தினம் இரவு சிறப்பாக நடைபெற்றது.

அது சமயம், சிறப்பு அலங்காரம் செய்யப்பட்ட ஸ்ரீ தியாகராஜர் வீற்றிருந்த படிச்சட்டத்தை நீண்ட வாரையில் கட்டி, அதற்கென நியமிக்கப்பட்ட நபர்கள் இடது வலது புறமாக வளைத்து வளைத்து ஆட்டமிட்டவாறு மண்டபத்திலிருந்து கொண்டு வந்தனர். இந்த நிகழ்ச்சி கோவல் வெளிப் பிராகாரத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் நிரவி திருப்பட்டினம் தொகுதி எம்எல்ஏ நாகதியாகராஜன் மற்றும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டார். சிறப்பு தீபாராதனைக்குப் பிறகு சுவாமியை சாந்தப்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடந்து இரவு 12 மணிக்கு ஸ்ரீ தியாகராஜர் யதாஸ்தானம் எழுந்தருளச் செய்யப்பட்டார். பிரம்மோற்சவத்தின் நிகழ்ச்சியாக இன்று (10.3.25) இரவு ரிஷப வாகனத்தில் வீற்றிருந்தவாறு மின்சார சப்பரப் படலிலும், 12ஆம் தேதி புதன்கிழமை திருத்தேரிலும், இரவு ராவண யுத்தம் (ஜடாயு சம்ஹாரம்) நடைபெறுகிறது. வரும் 14ந் தேதி தெப்ப உற்சவம் சிறப்பாக நடைபெற உள்ளது.

# செஞ்சி பேரூராட்சியில் மகளிர் தின விழா



**செஞ்சி, மார்ச் 10–**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில்உலக மகளிர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார். துப்புரவு ஆய்வாளர் பார்கவி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் பேரூராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவி குழுவினர்கள் மகளிர் தினத்தை முன்னிட்டு கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கினர்.

இதை தொடர்ந்து பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் அனைவருக்கும் நல திட்ட உதவிகளை வழங்கி மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார். நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆலோசனை கூட்டம்



**செஞ்சி, மார்ச் 10–**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அக்கட்சியின் தலைவர் வேல்முருகன் தலைமையில் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

ஆலோசனை கூட்டத்தில் கிராமங்கள் தோறும் கிளைகள் ஆரம்பித்து, அதிகப்படியான உறுப்பினர்களை சேர்த்து கட்சியை வலுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கட்சி வளர்ச்சிப் பணிகள் குறித்து சிறப்புரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் மே 18 ஆம் தேதி முள்ளிவாய்க்கால் நிறைவேந்தல் நிகழ்ச்சி நடைபெறவிருக்கும் இடத்தினை நேரில் சென்று பார்வையிட்டு பொதுமக்கள் அமர்வதற்கு இருக்கைகள் வசதிகள், மற்றும் குடிநீர் வசதிகள் முறையாக செய்வது குறித்து நிர்வாகிகளிடம் கலந்து ஆலோசித்தார்.

உடன் தலைமை நிலைய செயலாளர் கனல் கண்ணன், மாநில அமைப்பு குழு கடலூர் ஆனந்த் செஞ்சி தொகுதி பொறுப்பாளர் ராசநாயகன், மயிலம் தொகுதி பொறுப்பாளர் ஆனந்த் பாபு மற்றும் செஞ்சு ஒன்றிய செயலாளர் ராஜா உள்ளிட்ட விழுப்புரம் கள்ளக்குறிச்சி மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# தேசிய மக்கள் நீதிமன்ற முகாமில் 965 வழக்குகளுக்குத் தீர்வு




**காரைக்கால், மார்ச் 10–**

காரைக்காலில் நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்ற முகாமில், 965 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது.

தேசிய சட்டப்பணிகள் ஆணையத்தின் உத்தரவின்படி, சென்னை ஹைகோர்ட், புதுச்சேரி சட்டப்பணிகள் ஆணையத்தின் செயல் தலைவர் ஆகியோர் வழிகாட்டுதலில், தேசிய மக்கள் நீதிமன்ற முகாம், காரைக்கால் மாவட்ட ஒருங்கிணைந்த கோர்ட் வளாகத்தில் மாவட்ட நீதிபதி மோகன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாமில், காரைக்கால் கோர்ட்டில் நிலுவையில் இருந்த, சமாதானம் ஆகக்கூடிய கிரிமினல் வழக்குகள், காசோலை வழக்குகள், வாகன விபத்து நஷ்டஈடு வழக்குகள், குடும்ப நீதிமன்ற வழக்குகள், உரிமையியல் சிவில் வழக்குகள், தொழிலாளர் சம்பந்தப்பட்ட வழக்குகள், வங்கி சம்பந்தப்பட்ட வழக்குகள் உள்ளிட்ட 965 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முடிவில், 673 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டது. இந்த முகாமில், ஓய்வுபெற்ற நீதிபதி உத்திராபதி, சார்பு நீதிபதி பழனி, சட்டப்பணீ ஆணைய செயலாளர் ராஜசேகர், குற்றவியல் நீதிபதி–1 வரதராஜன், குற்றவியல் நீதிபதி–2 லிசி, வக்கில் சங்க தலைவர் எஸ்.திருமுருகன், மற்றும் இலவச சட்ட உதவி மைய வக்கில்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மகளிர் தின விளையாட்டு போட்டி பரிசளிப்பு விழா



உலக மகளிர் தினத்தில் உழவர்கரை தொகுதி ரெட்டியார்பாளையம் ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர், காவல் நிலைய மகளிர் காவலர்கள் மற்றும் தொகுதியின் பல்வேறு பகுதிகளில் (உழவர்கரை, மூலகுளம், பிச்சைவீரன்பேட், சாலைத்தெரு) நடைபெற்ற விளையாட்டு போட்டிகளை நடத்தி வெற்றி பெற்ற மகளிர்களுக்கு வாழ்த்து தெரிவித்து பரிசுகளை மக்கள் சேவகரும் பாஜக மாநில செயலாளர் உழவர்கரை சரவணன் வழங்கினார்.

### தென்காசி மாவட்டத்திற்கு நாளை ஆரஞ்ச் அலர்ட்

## நீர் நிலைகள், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க ஆட்சியர் வேண்டுகோள்



**தென்காசி, மார்ச் 10–**

தென்காசி மாவட்டத்தில் வருகின்ற 11.03.2025 அன்று பரவலான கனமழை எச்சரிக்கையாக ஆரஞ்ச் எச்சரிக்கை இந்திய வானிலை மையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட நாளில் நீர் நிலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளின் அருகில் வசிக்கும் பொதுமக்கள், கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மாவட்டத்தில் கனமழை காலங்களில், பொதுமக்கள் நீர்நிலைகள் மற்றும் ஆற்றில் குளிக்கச் செல்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் அனைவரும், இடி மின்னலுடன் கனமழை பெய்து வரும்போது, திறந்த வெளியில் நிற்பதையும், நீர் நிலைகளில் குளிப்பதையும், மரங்கள் மற்றும் உலோக கட்டமைப்புகளின் கீழ் நிற்பதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும். மழை, வெள்ளநீர் தேங்கும் இடங்களில் கால்நடைகளை கட்டிவைக்க கூடாது. வெள்ள பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும். வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் தாழ்வான பகுதிகளிலும், நீர்நிலைகளின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும்.

பொதுமக்கள் தங்களது ஆதார், குடும்ப அட்டை உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களை நெகிழி உறைகளில் வைத்து பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பேரிடர் காலங்களில், பொதுமக்கள் டார்ச்லைட், மருந்துகள் போன்ற அத்தியாவசிய பொருட்களை வைத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், பேரிடர் கால நடவடிக்கைகள் மேற்கொள்ள, 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அவசரக்கால கட்டுப்பாட்டு அறையில் கட்டணமில்லா தொலைபேசி எண்கள் 1077, 04633 290548 செயல்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்கள் 1077, 04633 290548 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு, மழை, வெள்ளம் மற்றும் பேரிடர்கள் குறித்து தகவல் தெரிவிக்கலாம். பெறப்படும் புகார்கள் மீது, உடனடி நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, கட்டுப்பாட்டு அறையில் சுழற்சி முறையில் பணிபுரியும் அலுவலர்கள் மூலம், சம்பந்தப்பட்ட துறைக்கு நேரடியாக தெரிவிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# ஒன்றிய அரசை கண்டித்து பொதுக்கூட்டம்





**மதுரை, மார்ச் 10–**

மதுரை திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பனையூர் பேருந்து நிலையம் முன்பு மதுரை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பாக இந்தி த்திணிப்பு, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும்பொதுக்கூட்டம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் விமல் தலைமையிலும், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் ரகு, ஜி.பி. ராஜா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டியன், வழக்கறிஞர் பாலாஜி, மாவட்ட கழக பொருளாளர் தங்கம் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். கிழக்கு ஒன்றிய செயலாளர் தனபாலன் தொகுப்புரை ஆற்றினார். மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு. மணிமாறன் சிறப்புரை ஆற்றினார். மேலும் இந்நிகழ்வில் பனையூர் திமுக இளைஞரணி செயலாளர் காட்டுராஜா, துணைச் செயலாளர் ராஜு, கழக இளம் பேச்சாளர்கள் வர்ஷினி, திராவிட இயக்க சிந்தனையாளர் இந்திராகுமார் தேரடி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை யாற்றினார்கள்.

# காரைக்கால் கடற்கரை பகுதியில் சிறப்பு துப்புரவு முகாம்



**காரைக்கால், மார்ச் 10–**

காரைக்கால் கடற்கரைப் பகுதியில் நகராட்சியுடன் ஹெச் ஆர் ஸ்கொயர் நிறுவனம் இணைந்து சிறப்பு துப்புரவு முகாம் சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் மாவட்ட கலெக்டர் சோமசேகர் அப்பா ராவ் அறிவுறுத்தல் படி, காரைக்கால் மாவட்டத்தை தூய்மை நிறைந்த மாவட்டமாக மாற்றுவதற்கான முயற்சியாக, வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காரைக்கால் மாவட்டத்தில் ஏதாவது ஒரு குப்பைகள் அதிகம் இருக்கும் பகுதியை தேர்ந்தெடுத்து சிறப்பு தூய்மை பணி நடைபெறுவது வழக்கம். அதன் ஒரு பகுதியாக, நேற்று காரைக்கால் கடற்கரை பகுதியில், காரைக்கால் உள்ளாட்சித் துறை துணை இயக்குனர் சுபாஷ், காரைக்கால் நகராட்சி ஆணையர் சத்யா ஆகியோரின் மேற்பார்வையில் சிறப்பு துப்புரவு முகாம் நடைபெற்றது. மேலும் காரைக்கால் கடற்கரையில் உள்ள லைட் ஹவுஸ், நடைபாதை மற்றும் கடற்கரை ஒட்டிய பகுதிகளில் இருந்த குப்பைகளை அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. இத் தூய்மை பணியானது நகராட்சி துப்புரவு ஊழியர்கள், நகராட்சி துப்புரவு மேற்பார்வையாளர்கள், ஹெச் ஆர் ஸ்கொயர் துப்புரவு அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பங்களிப்போடு நடைபெற்றது. இதனை தொடர்ந்து தூய்மை பணியில் ஈடுபட்டவர்கள் பொது இடங்களில் குப்பைகளை கொட்ட கூடாது, நெகிழி பயன்பாட்டை குறைக்க வேண்டும், நீர் நிலையங்களில் குப்பைகளை கொட்ட கூடாது, மக்கும் குப்பை மக்காத குப்பை என்று பிரித்தெடுக்க வேண்டும் என்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கினர்.

# வரசித்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேகம்



**மதுரை, மார்ச் 10–**

மதுரை கலைநகர் பகுதியில் அருள்பாலித்துக் கொண்டுருக்கும் வரசித்தி விநாயகர் கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடந்தது. கோவில் நிர்வாக தலைவர் மீனாட்சி நாதன், பொருளாளர் ராஜகோபால், செயலாளர் மாலையப்பன் மற்றும் நிர்வாகக் குழுவினர்கள் ஆகியோர் தலைமையிலும், சிவாச்சாரியார் ஆலங்குளம் சிவஸ்ரீ ராஜபட்டர் முன்னிலையிலயில் வேத மந்திரங்கள் முழங்க எடுத்துவரப்பட்ட புனித நீரானது கோபுர கலசத்தில் உற்றி மகா கும்பாபிஷேகம் சிரும் சிறப்புமாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. இந்த அன்னதானத்தில் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சி ஏற்பட்டினை கோயில் நிர்வாகிகள், விழா கமிட்டிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# தேவியாக்குறிச்சி தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்




**சேலம், மார்ச் 10–**

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தேவியாக்குறிச்சி, தாகூர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் இளைஞர்களுக்கான மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது: தமிழ்நாடு முதலமைச்சர் தொழில் துறை வளர்ச்சி மேம்பாடு அடையச்செய்யும் நோக்கோடு உலகத்தின் பல்வேறு நாடுகளுக்கு சென்று பல்வேறு தொழில் முதலீடுகளை ஈர்த்து அதன் மூலம் பல லட்சக்கணக்கான நபர்களுக்கான வேலைவாய்ப்பினை பெற்று தந்துள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் படித்த இளைஞர்கள் மற்றும் மகளிர் முன்னேற வேண்டும் என்ற உணர்வோடும் அக்கறையோடும் பல்வேறு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறார்கள்.

குறிப்பாக, அரசு பணியிடங்கள் போட்டித் தேர்வுகள் வாயிலாகவே நிரப்பப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வாயிலாக அனைத்து வித போட்டித் தேர்வுகளுக்கும் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தற்பொழுது வரை 43 தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டதில், 2,344 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். 445 நபர்கள் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரசு பணிவாய்ப்பினை பெற்றுள்ளனர். குறிப்பாக கடந்த தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்மிக்ஷி தேர்வில் 12 நபர்கள் வெற்றிப் பெற்றுள்ளனர்.

இன்றைய தினம் நடத்தப்படும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 161 முன்னணி வேலையளிக்கும் நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன. இம்முகாமில் பங்கேற்ற 3,497 நபர்களில், 629க்கும் மேற்பட்ட நபர்கள் தேர்வு செய்யப்பட்டு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் 31.01.2025 அன்றைய நிலையில் 1,38,688 நபர்கள் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்துள்ளனர். வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்து காத்திருக்கும் இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு, சேலம் மாவட்டத்தில் 2021 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட 9 மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் 49 சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களில் 14,334 நபர்கள் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும், இவ்வேலைவாய்ப்பு முகாமில் பணிக்கான ஆணைகளை அனைவருக்கும் எனது பெற்ற வாழ்த்துக்களையும், இம்முகாமில் கலந்துகொண்டுள்ள நிறுவனங்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொண்டு பணி நியமன ஆணை பெற்றவர்கள் இதோடு நின்றுவிடாமல் மேலும் வெற்றியடைய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு பேசினார்கள்.

முன்னதாக, சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வாயிலாக நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப் மிக்ஷி தேர்வில் வெற்றிப் பெற்றவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவரை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்ச்சியில், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மைய துணை இயக்குநர் செ.மணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் கலந்துகொண்டனர்.

# திருவண்ணாமலை ஆட்சியர் அலுவலகத்தில் மகளிர் தின விழா




**திருவண்ணாமலை, மார்ச் 10-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் உலக மகளிர் தினத்தையொட்டி மகளிர் திட்டம் சார்பாக நடைபெற்ற மகளிர் தின விழாவில் மகளிர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அதனை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மகளிர் திட்டம் சார்பாக நடைபெற்ற மகளிர் தின விழாவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கினார்.

உலகம் முழுவதும் வாழும் பெண்கள் சமூகத்திற்கு அளிக்கும் பங்களிப்பை அங்கீகரித்து கௌரவிப்பது அவசியமாகும். பெண்கள் எப்போதும் சமூகத்தை வடிவமைப்பதிலும் வளர்ச்சி பாதையை நோக்கி பயணிக்க வைப்பதிலும் கடுமையாக உழைத்துள்ளனர். மேலும் பெண்களின் பொதுவான உரிமைகள், சமத்துவம் மற்றும் உரிமைப் பாதுகாப்பு ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மகளிர் தினம் ஆண்டுதோறும் மார்ச் 08 ஆம் நாள் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு வரலாறு போற்றும் மகளிர் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அதில் குறிப்பாக விடியல் பயணம், மகளிர் உரிமை தொகை, புதுமை பெண் திட்டம், மகளிர் குழு கடன்கள் ரத்து மற்றும் பெண்களை தொழில் முனைவராகும் நோக்கில் கடனுதவிகள் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும் நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பாக செயல்படுத்தி வரும் திட்டங்கள் வாயிலாக மகளிர்கள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற உலக மகளிர் தின விழாவில் மகளிர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் மகளிர்களுடன் பார்வையிட்டார். அதனை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் மகளிர் திட்டம் சார்பாக 10 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.6 கோடியே 10 இலட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் நேரடி மற்றும் வங்கி பெருங்கடன் உதவிக்கான ஆணைகளையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பாக 2 பயனாளிகளுக்கு தலா ரூ.70 ஆயிரம் மதிப்பில் நுண் நிறுவன நிதி கடனுதவிக்கான ஆணைகளையும், 2 பயனாளிகளுக்கு ரூ.1 லட்சத்து 99 ஆயிரம் மதிப்பில் இணை மானிய நிதி கடன் உதவிக்கான ஆணைகளையும், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை சார்பாக 6 பயனாளிகளுக்கு தலா ரூ.50,000 மதிப்பில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வைப்பு தொகைக்கான பத்திரங்களையும், தாட்கோ சார்பாக 7 பயனாளிகளுக்கு தூய்மை பணியாளர் நல வாரிய அடையாள அட்டைகள் என மொத்தம் 27 பயனாளிகளுக்கு ரூ. 6 கோடியே 17 லட்சத்து 19 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து மகளிர் திட்டத்தில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பாராட்டு கேடயங்களை வழங்கினார். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைவருக்கும் உலக மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கடன் உதவிகளை பெற்றவர்கள் சிறப்பாக செயலாற்றி வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள கேட்டுக்கொண்டார்கள்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு அமைக்கப்பட்ட சிறப்பு கோ ஆப்டெக்ஸ் விற்பனை கண்காட்சியை பார்வையிட்டார். அதனை தொடர்ந்து மகளிர் திட்டம் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை வாங்குவோர் விற்போர் சந்திப்பு மையத்தை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு பொருட்களின் தரம், விலை மற்றும் விற்பனை விவரங்களை கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் மணி, திட்ட இயக்குநர் மகளிர் திட்டம் சரண்யா தேவி, மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) சரண்யா, மாவட்ட மேலாளர் தாட்கோ, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர், வாழ்ந்து காட்டுவோம் திட்ட செயல் அலுவலர், மகளிர் குழு உறுப்பினர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் மகளிர் தினவிழா





**நாமக்கல், மார்ச் 10-**

நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் உலக மகளிர் தின விழா 2025 முன்னிட்டு, நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி ஆகியோர் முன்னிலையில் மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு பெண்களின் வாழ்க்கை தரத்தை ஊக்குவிக்கும் வகையிலும், இது பெண்களுக்கான ஆட்சி என்று கூறும் வகையிலும் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக அரசு வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்த நிலையில் 50 சதவிகிதம் இடஒதுக்கீடு அறிவித்தார்கள். மேலும், பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், கலைஞர் உரிமைத்தொகை, பேருந்துகளில் இலவச விடியல் பயணம், காலை உணவுத்திட்டம், அரசுப்பள்ளி மாணவ, மாணவியர்கள் மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை, அறிவியல் உள்ளிட்ட உயர்கல்வி பயில 7.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்கி உள்ளார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் நீங்கள் படியுங்கள், படித்து கொண்டே இருங்கள் உங்களுக்கு உதவிட நான் உள்ளேன் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும், பணிக்கு செல்லும் மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம், மாதம் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமை தொகை, 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தள்ளுபடி, உள்ளிட்ட சிறப்பான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989 ஆம் ஆண்டு தர்மபுரியில் தொடங்கி வைக்கப்பட்ட மகளிர் சுய உதவிக்குழு திட்டமானது உலகளவில் புகழ் பெற்றுள்ளது. பெண்கள் பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறவும், தற்சார்பு அடையவும், கிராமப்புற பெண்களின் சுயத்தொழிலை ஊக்குவிக்கும் வகையிலும் மகளிர் சுய உதவிக்குழு தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் பயன்பெற்று வருகின்றார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் இந்திய திருநாட்டில் ஆண்களுக்கு சமமாக பெண்களுக்கு சொத்தில் சம உரிமை வழங்க வேண்டுமென சட்டத்தை நிறைவேற்றியவர். 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் பெண்களுக்கு 33 சதவிகிதம் இடஒதுக்கீடு வழங்கினார்கள். அவரது வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து துறைகளிலும் பெண்கள் சாதிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகிதம் இடஒதுக்கீடு அறிவித்தார்கள்.

தொடர்ந்து, பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் இராஜேஸ்குமார் தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிபொறுபேற்ற பிறகு செல்படுத்தப்பட்டு வரும் காலை உணவுத்திட்டம், மகளிர் உரிமை தொகை, இலவச விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம், கலைஞர் கனவு இல்லம் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி, 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, தமிழ்புதல்வன் திட்டம், மகளிர் சுய உதவிக்குழு திட்டம், பெண்களுக்கு சொத்தில் சம உரிமை சட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்து பொதுமக்களிடம் கேள்வி எழுப்பி எடுத்துரைக்க செய்தார். மகளிர் உரிமை தொகை திட்டத்தில் விடுப்பட்ட மகளிருக்கு இன்னும் 3 மாத காலத்திற்குள் வழங்கப்படும் என தெரிவித்தார். தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் தேர்வாணைத்தின் மூலம் நடத்தப்படும் தேர்வுகளில் தமிழ் மொழி தேர்வை கட்டாய பாடமாக அறிவித்து படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்துள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான ஆட்சியானது ஏழை, எளிய மக்களுக்கான ஆட்சி. எனவே, அரசின் திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்ள வேண்டும். பெண்கள் தொழில் முனைவோர்களாக தங்களை மேம்படுத்தி கொள்ள வேண்டும். அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகளை தெரிவித்துகொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் பூபதி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) சரவணன், மகளிர் திட்ட இயக்குநர் செல்வராசு, மாவட்ட சமூக நல அலுவலர் காயத்திரி, வேளாண்மை இணை இயக்குநர் கலைசெல்வி, தோட்டக்கலைத் துணை இயக்குநர் புவனேஷ்வரி, வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கிருஷ்ணவேணி, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் பத்மாவதி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# ஈரோட்டில் 10,552 பயனாளிகளுக்கு ரூ.80.23 கோடியில் நலத்திட்ட உதவி வழங்கல்




**ஈரோடு, மார்ச் 10-**

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் பங்கேற்று பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியதைத் தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் முத்துசாமி ஈரோடு மாவட்டம், சித்தோடு அரசு பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட்ட காணொலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, 10,552 பயனாளிகளுக்கு ரூ.80.23 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது, அனைத்து மகளிருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் சென்னையில் மகளிரின் வாழ்க்கையினை முன்னேற்றும் வகையில் நடைபெற்ற மாபெரும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, மகளிருக்கு எண்ணற்ற நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள். மேலும் இந்நிகழ்ச்சி மகளிரின் வாழ்வில் மறுமலர்ச்சியினை உருவாக்கும் வகையில் நடைபெற்றுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் நடைபெற்ற நிகழ்ச்சியில் மனதார அவர்களுக்கு உதவிகளை வழங்கி, எந்த நேரமும் உங்களுக்காக இருப்போம், உழைப்போம், நீங்கள் துணிச்சலாக உங்களது பணிகளை மேற்கொள்ளுங்கள், எந்த நோக்கத்திற்காக நலத்திட்ட உதவிகளை பெறுகிறீர்களோ அதனை சரியாக முதலீடு செய்து, சிறப்பாக செய்யுங்கள் என்று வாழ்த்தியது, அனைவரின் மனதிலும் நிலைத்துள்ளது.

ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை மகளிர் தின நிகழ்ச்சி சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மகளிர் சுய உதவிக்குழுவினர் உட்பட ஏறத்தாழ 10,552 பயனாளிகள் பயன்பெறுகின்ற வகையில் ரூ.80.23 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக மாற்றுத்திறனாளி மகளிருக்கு இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த 20.12.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், உயர்கல்வித் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள சிக்கய்ய நாயக்கர் கல்லூரியில், ரூ.10.70 கோடி மதிப்பீட்டில், உலகத் தரத்திலான விளையாட்டு மைதானம், நூலக வசதிகள் மற்றும் குடிமைப் பணிகள் தேர்வுக்கான பயிற்சி மையம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து, இப்பணிகளை துரிதப்படுத்தும் வகையிலும், மேலும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், உயர்கல்வித்துறை அமைச்சருன் இணைந்து கடந்த 06.03.2025 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு பல்வேறு திட்டங்கள் நம்முடைய மாவட்டத்தில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பிறகு எண்ணற்ற திட்டங்களை நமக்கு வழங்கியுள்ளார்கள். குறிப்பாக, முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மகளிருக்கு நகர பேருந்து கட்டணமில்லா பயணம் மேற்கொள்ள விடியல் பயணம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக மாதம் ரூ.1000 வழங்குகின்ற திட்டம், உயர்கல்விக்கு செல்லும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம் இவ்வாறு பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் இன்றைய தினம் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கடனுதவி மற்றும் இதர நலத்திட்ட உதவிகளை பெறுகின்ற மகளிர் அதனை நல்ல முறையில் பயன்படுத்தி, வாழ்வில் மேன்மேலும் உயர வேண்டும் என வாழ்த்துகிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டம் சார்பில் சுய உதவிக்குழுக்கான வங்கி கடன், பெருங்கடன், வட்டார வணிக வளமைய கடன், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் சார்பில் நுண்நிறுவன நிதிக்கடன், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், வேளாண் இயந்திரமயமாக்கல், அங்கக உற்பத்திக்கு குழு, வேளாண் தொழில்முனைவோராக்குதல் திட்டங்களின் கீழ் நலத்திட்ட உதவிகள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் உழவர் சந்தை விற்பனை கடன் அட்டை, பொருளீட்டுக்கடன், வேளாண் பொறியியல் துறை, தாட்கோ சார்பில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தில் கடனுதவி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் எரிவாயு சலவைப் பெட்டி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில் கல்வி, திருமணம், ஈமச்சடங்கு மற்றும் ஓய்வூதிய உதவித்தொகை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் கலைஞரின் கனவு இல்லம் கட்டுவதற்கான ஆணை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் இலவச தையல் இயந்திரம் என மொத்தம் 10,552 பயனாளிகளுக்கு ரூ.80.23 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வெங்கடாசலம் (அந்தியூர்), சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் செல்வராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் அர்பித் ஜெயின், திட்ட அலுவலர் (பொ) மகளிர் திட்டம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) ரமேஷ், மாவட்ட சமூக நல அலுவலர் சண்முக வடிவு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, திட்ட மேலாளர் (தாட்கோ) அர்ஜுன் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை வீரனுக்கு முப்பூசை படையல் விழா



புதுச்சேரி, மார்ச் 10-

புதுச்சேரி முத்தரையர்பாளையம் கல்கி கோவில் அருகே அமைந்துள்ள மதுரை வீரனுக்கு ஒன்பதாம் ஆண்டு திருவிழா மற்றும் முப்பூசை படையல் விழா காட்டுநாயக்கன் சமூக சீர்திருத்த சங்கம் சார்பில் நடைபெற்றது. இந்த விழாவில் இந்திராநகர் சட்டமன்ற உறுப்பினரும் ஆறுமுகம், புதுச்சேரி ஆதிதிராவிட நலம் மற்றும் பழங்குடியின நலத்துறை இயக்குனர் இளங்கோவன், புதுச்சேரி மாநில பழங்குடி மக்கள் கூட்டமைப்பு மாநில தலைவர் டாக்டர் ராம்குமார், புதுச்சேரி சமூக நீதிப் பேரவை தலைவர் தன ராமன், சட்ட ஆலோசகர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டனர். பழங்குடி காட்டுநாயக்கன் சமுதாய மக்கள் ஏராளமானோரின் குலதெய்வமான ஸ்ரீ மதுரை வீரனுக்கு குல வழக்கப்படி முப்படை பூஜை செய்தும் கலாச்சார நடனங்களும் நிகழ்ச்சினர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புதுச்சேரி பிற்படுத்தப்பட்ட காட்டுநாயக்கன் சமூக சீர்திருத்த சங்க தலைவர் சுரேஷ் தலைமையிலும், முதன்மை செயலாளர் செல்வம் கௌரவ தலைவர்கள் சுப்புராயலு கலியமூர்த்தி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். விழாவில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் கலந்துகொண்டனர்.

# 938 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.76.52 கோடியில் நலத்திட்ட உதவி

## அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம், அய்யப்பன் எம்எல்ஏ வழங்கினர்



கடலூர், மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் காணொலி காட்சி வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து அமைச்சர் எம்ஆர்கே பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர் தனியார் பள்ளி அரங்கில் நடைபெற்ற விழாவில் மகளிர் திட்டம் மூலம் 938 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.76.52 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்பு உட்பட 1,163 பயனாளிகளுக்கு ரூ.80.67 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் மகளிர்களின் முன்னேற்றத்தினை அடிப்படையாக கொண்டு, பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்திடும் வகையில் தொலைநோக்குப் பார்வையுடன் மகளிரின் முன்னேற்றத்திற்காக 1989ஆம் ஆண்டு தர்மபுரி மாவட்டத்தில் வேளாண் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருந்த மகளிரைக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள் திட்டத்தினை துவக்கி வைத்தார். பெண்கள் பொருளாதார வளர்ச்சி பெற்று தன்னம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் துவங்கப்பட்ட மகளிர் சுய உதவி குழு இயக்கம் தற்பொழுது மகளிரின் உழைப்பால் வெற்றிகள் பெற்று பாராட்டை பெற்று வளர்ந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் அவர்கள் பொருளாதாரத்தில் மேன்மையடையும் வகையிலும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக கடலூர் மாவட்டத்தில் மகளிர் இலவச பேருந்து பயணத்திட்டத்தில் 18.60 கோடி மதிப்பீட்டில் 36,302 மகளிர்கள் பயணங்கள் மேற்கொண்டுள்ளனர். எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் 4,50,134 குடும்பத்தலைவிகள் பயனடைந்து வருகின்றனர்.

புதுமைப் பெண் திட்டத்தில் 13,018 மாணவிகளும், தமிழ்ப் புதல்வன் திட்டத்தில் 13,514 மாணவர்களும் பயனடைந்து வருகின்றனர். மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊரகம் மற்றும் நகரப்பகுதியில் 64,147 குழந்தைகள் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்திலும், 1,61,104 குழந்தைகள் மதிய உணவு திட்டத்திலும் பயன்பெற்று வருகின்றனர். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தில் கர்ப்பிணி பெண்களுக்கு ரூ.18.000 வீதம் ரூ.91.35 கோடி மதிப்பீட்டில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் 17715 மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த 2,48,045 உறுப்பினர்களுக்கு ரூ.4537.57 கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 23402 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1356.78 கோடி வங்கி நேரடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மகளிர் திட்டம் மூலம் 938 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.76.52 கோடி மதிப்பீட்டில் வங்கி கடன் இணைப்புகளையும், 5 பயனாளிகளுக்கு 0.22 கோடி மதிப்பீட்டில் மணிமேகலை விருதினையும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் 38 பயனாளிகளுக்கு ரூ.1.91 கோடி மதிப்பீட்டில் பழங்குடியினர் நல வீடு கட்டுவதற்கான ஆணையினையும், தாட்கோ மூலம் 7 பயனாளிகளுக்கு ரூ.0.42 கோடி மதிப்பீட்டில் கறவை மாடுகளையும், மாவட்ட சமூக நல அலுவலகம் சார்பில் 50 பயனாளிகளுக்கு சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழுங்கும் திட்டத்தில் 2 லட்சம் மதிப்பீட்டில் தையல் இயந்திரங்களையும், மாவட்ட தொழில் மையம் மூலம் 11 பயனாளிகளுக்கு ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் 114 பயனாளிகளுக்கு ரூ.0.54 கோடி மதிப்பீட்டில் இணை மானியமும் என மொத்தம் 1,163 பயனாளிகளுக்கு ரூ.80.67 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சுய உதவிக் குழு இயக்கத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கி கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார மேம்பாடு மற்றும் சுயசார்பு தன்மை மூலம் பெண்களின் நிலையை மேம்பாடு அடையச் செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகிய மூன்று முக்கிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐயப்பன், சிந்தனைசெல்வன், கடலூர் மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் சரண்யா, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் இளஞ்செல்வி, திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் ஜெயசங்கர், மாவட்ட சமூக நல அலுவலர் சித்ரா, மாவட்ட தாட்கோ மேலாளர் லோகநாதன், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# சீரிய திட்டங்களை வகுத்து பெண்களை தொழில்முனைவோர்களாக உருவாக்கி வரும் முதல்வர்

## கன்னியாகுமரி மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி






கன்னியாகுமரி, மார்ச் 10-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற நாளிலிருந்து தமிழ்நாட்டின் கடைகோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து, பிற மாநிலங்களே வியந்து பாராட்டும் வகையில், இது நமது அரசு என்று பொதுமக்கள் அனைவரும் சொல்லும் அளவிற்கு சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

அதன்ஒருபகுதியாக ஊரக பகுதி மக்களின் வறுமையை குறைக்கும் பொருட்டு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் சுய உதவிக்குழு அமைப்புக்களை உருவாக்கி, பயிற்சியளித்து, சுழல் நிதி வழங்கி, வங்கிக்கடன் இணைப்புக்களை ஏற்படுத்தி, தொழிற்பயிற்சி அளித்து, உற்பத்தி பொருட்களை கண்கவரும் வகையில் பேக்கிங் செய்து விற்பனை செய்திட உள்ளூர், பெருநகரங்கள், தலைநகரம். தேசிய அளவில் மேலும் இணைய வழி சந்தைப்படுத்துவதற்காகவும் பல்வேறு வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுத்து பெண்களை வறுமையிலிருந்து மீட்பதுடன் வாழ்க்கை தரம் உயர்வதற்கும் வழி வகுத்துள்ளார்கள்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தெரிவிக்கையில், கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வறுமையை குறைத்து வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் சுய உதவிக்குழுக்களில் இணைந்த பெண்களுக்கு பல்வேறு விதமான கைவினைப்பொருட்கள் தயாரித்தல், உணவு பதப்படுத்துதல். காளான்வளர்ப்பு குறித்த பயிற்சிகள், சந்தைப்படுத்தல், அச்சகம், நர்ஸரி உள்ளிட்ட தொழில்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது. பயிற்சிகள் முடிந்த பின் அவர்கள் சுயதொழில் தொடங்குவதற்கு சுழல் நிதி. சமூக முதலீட்டு நிதி, நலிவு குறைப்பு நிதி, கூட்டமைப்பு ஊக்க நிதி, வாழ்வாதார நிதி, பண்ணைசார் திட்ட நிதி, வட்டார வணிக வள மைய நிதி மற்றும் பாரத பிரதமரின் உணவு பதப்படுத்தும் சிறு நிறுவனங்களுக்கான திட்ட நிதி என பல்வேறு வகையான நிதியுதவிகள் தமிழ்நாடு அரசின் மூலம் அளிக்கப்படுகிறது. மேலும் பெண்களிடையே நிதி சுழற்சியை அதிகப்படுத்தும் வகையில் வங்கிக்கடன். வங்கிப்பெருங்கடன், தனி நபர் தொழில் முனைவு கடன் ஆகிய கடன் வசதிகள் வங்கிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மகளிர் திட்டம் சார்பில் சமுதாய முதலீட்டு நிதியின் கீழ் கடந்த 2021 முதல் இதுவரை 1773 சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.15.10 கோடி மதிப்பில் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது. பெண்களுடைய தொழில் முனைவு திறனை அதிகப்படுத்துவதற்கு உரிய பயிற்சி, தொழில் திட்டம் தயாரித்தல், சிறு குறு தொழில் நிறுவனப்பதிவு, தொழிற்கடன், தனிநபர் காப்பீடு, இயந்திரங்கள் காப்பீடு, மூலதன மானியம் பெறுதல், வட்டி மானியம் பெறுதல், உற்பத்தி பொருட்களை சந்தைபடுத்துதல் போன்ற வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழு கூட்டமைப்புகள், சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநர்கள், வங்கிக்கடன் ஒருங்கிணைப்பாளர்கள் பண்ணை சார் மற்றும் பண்ணைசாரா சமுதாய வளப்பயிற்றுநர்கள் சேவையாற்றி வருகின்றனர். இதற்கென ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலத்திலும் ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. சுய தொழில் பயிற்சி மற்றும் தொழில் முனைவு கடன் தேவையுள்ள ஊரக பகுதி மகளிர் அனைவரும் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகங்களில் இயங்கி வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகங்களை அணுகி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முயற்சி இருந்தால் விண்ணையும் எட்டலாம் முயற்சியுடன் பயிற்சியும் இருந்தால் வாழ்க்கையில் எதையும் சந்திக்கலாம். அவ்வாறு மகளிர் திட்டம் மூலம் சாதித்துக் கொண்டே இருக்கிற மகளிர் சுயஉதவிக்குழு பெண்களை வாழ்த்துவதோடு. உலக மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறைந்தது மனது நிகழ்ச்சியின் கீழ் அச்சகம் தொழிலில் பயனடைந்த இறச்சகுளம் ஊராட்சி பகுதியை சார்ந்த பவளமல்லி மகளிர் சுயஉதவிக்குழுவை சார்ந்த உறுப்பினர் முருகேஸ்வரி தெரிவிக்கையில்: நான் தோவாளை வட்டத்துக்குட்பட்ட இறச்சகுளம் ஊராட்சியில் அருள்ஞானபுரம் குக்கிராமத்தில் எனது கணவர், எனது தாயார். எனது மகனுடன் வசித்து வருகிறேன். எனது குடும்பம் ஒரு மிகவும் ஏழ்மையான குடும்பம். எனது கணவருக்கு நிரந்தர வேலை கிடையாது ஒரு மாதத்தில் 5 நாள் அல்லது ஆறு நாள் மட்டுமே வேலை இருக்கும். இந்த வருமானத்தை வைத்து என்னால் குடும்பத்தின் தேவைகளை சந்திக்க முடியவில்லை. மகனின் படிப்பிற்கான தேவையும் என்னால் பார்க்க முடியவில்லை என்ன செய்வது என்று கலங்கி கொண்டிருக்கும்போது தான் 2008ம் ஆண்டு பவளமல்லி சுயஉதவிக்குழுவை ஆரம்பித்து அதில் ஊக்குனராக இருந்து மாதம் ரூபாய் 50 சேமித்து வந்தேன். சேமிப்பு மட்டும் போதுமா இதற்கு வருமானம் வேண்டுமே என்று எண்ணும் நேரத்தில் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி வழங்குவதாக தெரிவித்தார்கள். திறன் வளர்ப்பு பயிற்சியை சொந்த மாவட்டத்திலே தந்தது. கணிணி வகுப்பில் மூன்று மாதம் காலம் பயின்றேன். நான் +2 படித்திருந்தால் இந்த பயிற்சியோடு நின்று விடக்கூடது அடுத்த பரிமாணத்திற்கு போக வேண்டும் என்று நினைத்தபோதும், சுயஉதவிக்குழு பெண்களை தொழில் முனைவோர்களாக மாற்றிடும் வகையில் எங்கள் சுய உதவிக்குழுவை பஞ்சாயத்து குழு கூட்டமைப்பில் இணைத்து இருந்தோம். அதன் பலனாக முதன்முதலில் சமுதாய முதலீட்டு நிதி எங்கள் குழுவில் எனக்கு ரூ.50,000 கிடைத்தது. இந்த தொகையை வைத்து Computer ம் பிரிண்டரும் வாங்கினேன். இதன் மூலம் என் மகனும் படிப்பு இல்லாத நேரத்தில் எனது மகன் typing செய்து கொடுப்பான் நான் xerox எடுத்து கொடுப்பேன் நாங்கள் இருவரும் சேர்ந்து கம்பியூட்டரில் வேலைசெய்து எனது மகளின் படிப்புக்கு தேவையான பணமும், வீட்டிற்கு மாதம் 3000மும் வருமானமும் வர ஆரம்பித்தது.

அதனைத்தொடர்ந்து பெண்ணின் வளர்ச்சி சமுதாயத்திற்கும் பயன்பட வேண்டும் எனவே குழுவாக சேர்ந்து பவள மல்லி குழு அச்சகம் ஆரம் பித்தேன். ஆண்களுக்கு இங்கே பெண்கள் சளைத்தவர்கள் இல்லை என்று ஆண்கள் செய்யும் தொழிலையே தேர்ந்தெடுத்தேன் 2021 ம் ஆண்டு ஆரம்பித்த எங்கள் தொழில் மென்மேலும் வளர்ந்து கடனை அடைத்து, பிறருக்கும் வேலை வழங்கி உதவியாக இருந்து வருகிறது. எனவே இதுபோன்ற சீரிய திட்டங்களை வகுத்து பெண்களை புதிய தொழில்முனைவோர்களாக உருவாக்கி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எங்கள் பவளமல்லி குழு அச்சகம் சார்பாகவும், என்போன்ற சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் சார்பாக நிறைந்த மனத்துடன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தொகுப்பு:-
**ஜாண் ஜெகத் பிரைட்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**செல்வலெட் சுஷ்மா**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.





OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# புதுச்சேரியில் தனிநபர் வருமானம் ரூ.3 லட்சமாக உயர்வு-கவர்னர்

# பையனூர் சிப்காட் கோத்ரேஜ் ஆலையில் உற்பத்தியை தொடங்கி வைத்த முதல்வர்





# தங்கம் விலை திடீர் உயர்வு


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 10-3-2025 திங்கள்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்